04.10.2025 ❖ வரலாறு

# ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் பிரம்மாண்டமான புதுமை விழா திங்க்ஃபினிட்டி ஹேக்கத்தான் 2025 நடைபெற்றது





திருவள்ளூர் : அக். 4.

திருவள்ளூர் மாவட்டம், வேப்பம்பட்டு பகுதியில் உள்ள பெருமாள்பட்டு என்ற இடத்தில் அமைந்துள்ள ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியின் கணிப்பொறியியல் துறை சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட திங்க்ஃபினிட்டி ஹேக்கத்தான் 2025 கல்லூரி வளாக கலையரங்கத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சி தலைமை விருந்தினர் முனைவர் ஆர். பூவேந்திரன், CIO - AIML கிளவுட் ஸ்மார்ட் மொபிலிட்டி, சென்னை. டெக்னோசைன் நெட்வொர்க்கிங் கன்சல்டன்சி தலைமையிலும் ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியின் முதல்வர், முனைவர் பி.ஆர். ரமேஷ் பாபு, கணிப்பொறியியல் துறை தலைவர் முனைவர் பி.மகேஷ், கணிப்பொறியியல் துறை பேராசிரியர் முனைவர் என்.ஆர். சங்கர் ஆகியோரின் முன்னிலையில் துவங்கியது.

விழாவில் கணிப்பொறியியல் துறை பேராசிரியர் ஒருங்கிணைப்பாளர் முனைவர் எம். குமார் வரவேற்புரை ஆற்றினார். இதனை தொடர்ந்து கணிப்பொறி அறிவியல் துறை திட்டத் தலைவர் ஏ.லாவண்யா தலைமை விருந்தினரின் அறிமுக உரையாற்றினார். இளம் புதுமை ஆர்வலர்களை ஒன்றிணைத்து, அவர்களின் தொழில்நுட்பத் திறன்கள், படைப்பாற்றல் மற்றும் உடனடி குறைதீர்க்கும் திறன்களை வெளிப்படுத்தும் விதமாக இந்த நிகழ்ச்சி அமைந்திருந்தது.

அணிக்கு நான்கு உறுப்பினர்கள் என, புதுமை, சாத்தியக்கூறு, தொழில்நுட்ப செயல்படுத்துதல் மற்றும் விளக்கக் காட்சி திறன்கள் ஆகியவற்றை மையமாக கொண்டு இந்த நிகழ்ச்சி தொடங்கப்பட்டது. எஸ்.ஏ.பொறியியல் கல்லூரி, கொங்குநாடு பொறியியல் கல்லூரி, டி.எம்.ஐ பொறியியல் கல்லூரி, அப்பல்லோ பொறியியல் கல்லூரி, சவிதா பல்கலைக்கழகம், ராஜலட்சுமி பொறியியல் கல்லூரி, பிரத்யூஷா பொறியியல் கல்லூரி, பனிமலர் பொறியியல் கல்லூரி, ஜி.ஆர்.டி இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி, வேலம்மாள் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி, திருச்சி எம்.ஐ.இ.டி. பொறியியல் கல்லூரி, ஜெயா பொறியியல் கல்லூரி என 35க்கும் மேற்பட்ட கல்லூரிகளை சார்ந்த மாணவ, மாணவியர் பங்கு பெற்றனர்.

இந்த நிகழ்ச்சியின் சிறந்த வெற்றியாளர்களுக்கு பரிசும், பாராட்டு சான்றிதழும் வழங்கப்பட்டது. முதல் பரிசு ரூ.5000 சவிதா பல்கலைக்கழகம். இரண்டாம் பரிசு ரூ.3000 வேலம்மாள் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி, மூன்றாம் பரிசு ரூ.1500 ராஜலட்சுமி பொறியியல் கல்லூரி, நான்காம் பரிசு ரூ.750 ஸ்ரீராம் பொறியியல் கல்லூரி மற்றும் பிரத்யூஷா பொறியியல் கல்லூரி வெற்றி பெற்றனர்.

இந்த நிகழ்ச்சியில் பரிசு பெற்றவர்கள் மட்டும் இன்றி அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் புதுமையான மனப்பான்மைக்காக பெரும் பாராட்டுகளைப் பெற்றனர். இந்த நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை மாணவ ஒருங்கிணைப்பாளர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். விழாவின் இறுதியாக கணிப்பொறியியல் துறையின் உதவி பேராசிரியர் பிரவீனா நன்றியுரை ஆற்றினார்.